ச.செ.எண்: 59 நாள்: 27-11-2017

# பத்திரிக்கை செய்தி

## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-IV, V.A.O தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கிராம நிர்வாக அதிகாரி விஏஓ, இளநிலை உதவியாளர், வரி வசூலிப்பவர் கிரேடு-1, நில அளவர் சர்வேயர், வரைவாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பதவிகளில் காலியாக உள்ள 9,351 பணியிடங்களுக்கு எழுத்துத் தேர்விற்கான விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக வரவேற்றுள்ளது. இதற்கான கல்வித் தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 10ம் வகுப்பு மட்டும் படித்தவர்கள் 18 முதல் 30 வயதுக்குள் இருக்க வேண்டும். ஆதி திராவிட பழங்குடியின, பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வயது வரம்பில் தளர்வு உண்டு. 12ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்தவர்களுக்கு வயது வரம்பு இல்லை. தவிர கிராம நிர்வாக அலுவலர் பணிக்கென தனியான வயது வரம்பும் உண்டு. இததேர்வுக்கான விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க கடைசி நாள் 13.12.2017 ஆகும். இந்த தேர்வுகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் உதகை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 4-வது பிளாக், கூடுதல் ஆட்சியர் அலுவலக வளாகம், பிங்கர் போஸ்ட், உதகையில் வருகிற 04.12.2017 முதல் சிறந்த வல்லுனர்களை கொண்டு நடத்தப்பட உள்ளன. எனவே தேர்விற்கு விண்ணப்பித்துள்ள மனுதாரர்கள் இந்த இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் இலவச பயிற்சி வகுப்பு குறித்த விவரத்தினை அறிந்துக் கொள்ள (0423) 2223346 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் எனவும் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
நீலகிரி மாவட்டம்.